**17.10.2019 அ.வ.எண். 117/2015 வா.த.சா.1 வசந்தி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியாது. 1988ம் வருடம் எனக்கும் எனது கணவருக்கும் திருமணம் நடந்தது. எனது மாமியார் பெயர் சரஸ்வதி ஆகும். எனது மாமியர் 2001ம் வருடம் இறந்துபோனார். 1988ம் வருடம் எனக்கு திருமணமான பிறகு எனது கணவரின் குடும்பத்தாருடன் நாங்கள் கூட்டுக்குடும்பமாக வசித்துவந்தோம் என்று சொன்னால் சரிதான். 19.10.2000ம் அன்று எனது கணவர், அவரது தாயார், அவரது சகோதரர் பிரதிவாதிக்குமிடையே எழுத்து மூலமாக பாகப்பிரிவினை ஏற்பட்டு அது பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் எனது மாமனார் உயிருடன் இருந்தபோதே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது. 1983ம் வருடத்திலேயே அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டது. அவ்வாறு எனக்கு திருமணத்திற்கு முன்னதாகவே பாகபிரிவினை ஏற்பட்டது என்று நான் கூறுகிறேன் என்று சொன்னால் சரிதான். 1983ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினை சம்மந்தமான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா 1, 3, 4 அயிட்ட சொத்துக்கள் ஆதியில் எனது கணவரின் தாய்வழி பாட்டியான சம்பத்ராவ் மனைவி ஜீவரத்தினம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்கள் எனது கணவரின் தாத்தா சம்பத்ராவ் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். அந்த சொத்துக்கள் சம்மந்தமாக 25.09.2003 அன்று ஜீவரத்தினம்மாள் பிரதிவாதி பெயருக்கு உயில் ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது திருமணத்தை எனது தாயார் வீட்டில் நடத்திவைத்தார்கள். பாகபிரிவினையில் கிடைத்த சொத்துக்களில் கொல்லைமேட்டிலுள்ள 4 ஏக்கர் நிலத்தை எனது மகளின் திருமணத்திற்காக கிரையம் செய்துகொடுத்தோம் 4ம் அயிட்ட சொத்து 6 செண்ட் நிலத்தில் அமைந்துள்ளது. அதன் நீள அகல அளவுகள் எனக்கு தெரியாது. 4ம் அயிட்ட சொத்து வா.த.சா.ஆ 2 ஆவணத்தின் படி ஜீவரத்தினம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2000ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பட்டா மாறுதல் செய்யப்படாத காரணத்திலனால் அதை அனுகூலமாக கொண்டு தாவாசொத்துக்கள் எனது கணவருக்கு பாத்தியப்பட்டது என தவறான சங்கதிகளை குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்துவருகிறது என்றும், தாவா சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் நாங்கள் தான் இடையூறு விளைவித்து வருகிறோம் என்றும், அதனால் பிரதிவாதி காவல் நிலையத்தில் எங்களுக்கு எதிராக புகார் அளித்துள்ளார் என்ற சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.